සියලු ම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education - Western Province

පළමුවාර අවසාන ඇගයීම
முதலாம் தவணை பரீட்சை - 2018
First Term Evaluation

| ශ්‍රේණිය / தரம் / Grade | 08 | විෂයය / பாடம் / Subject | வரலாறு | පත්‍රය / வினாத்தாள் / Paper | I,II | කාලය / காலம் / Time | 2Hour |
|---|---|---|---|---|---|---|---|

- **இலக்கம் 01 முதல் 20 வரையான வினாக்களுக்கு, மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**

01. சுமார் கி.பி ஆறாம் நூற்றாண்டில் இந்நாட்டிற்கு வந்து குடியேறிய, இந்திய குழுவினர் குடியேற்றத்திற்காக தெரிந்தெடுத்த வலயம்,

1. ஈரவலயம் 2. உலர் வலயம் 3. மலைநாட்டு வலயம் 4. கரையோர வலயம்

02. பின்வருவனவற்றுள் கிராம குளங்கள் தொடர்பான பிழையான கூற்று,

1. சிறு ஓடை அல்லது கால்வாய்க்கு குறுக்கே அணை கட்டு நீரை சேமித்தல்.
2. மூன்று பக்கமும் நிலத்தையும் மறுபுறத்தில் தாழ்ந்த அணைக்கட்டையும் கட்டி மழை நீரை சேமித்தல்.
3. நதிகளுக்கு குறுக்காக அணைகட்டி நீரை சேமித்தல்.
4. கிராமத் தலைவரது வழிகாட்டலுக்கிணங்க கிராமவாசிகள் ஒன்றுகூடி குளம் நிர்மாணித்தல்.

03. கி.பி 1215இல் இராசரட்டை நாகரிகம் வீழ்ச்சியடைய, செல்வாக்குச் செலுத்திய முக்கிய காரணி,

1. குளக்கட்டுகள் நிர்மூலமாகியமை.
2. அரசர்களுக்கிடையே ஏற்பட்ட முரண்பாடுகள்.
3. தொற்று நோய்கள் பரவியமை.
4. காலிங்க மாகனின் ஆக்கிரமிப்பு.

04. முதன் முதலில் இலங்கையில் பாரிய வாவிகளை அமைத்தவர் எனக் கூறப்படுபவர்,

1. தேவநம்பியதீச மன்னன் 2. வசப மன்னன்
3. மகாசேன மன்னன் 4. தாதுசேன மன்னன்

05. வவுனியா-மன்னார் பிரதான வீதிக்கருகில் மல்வத்து ஓயாவுக்கு குறுக்காக கட்டப்பட்டுள்ள அணை யாது?

1. எலகர அணை 2. மினிப்பே அணை
3. தேக்கம் அணை 4. ஹத்தொட்ட அணை



kalvi.lk

06. நிள அளவை தொடர்பில், புராதன இலங்கையரிடம் காணப்பட்ட விசேட திறமையை எடுத்துக்காட்ட சிறந்த உதாரணமாக விளங்குவது,

1. தல்வத்து கால்வாய் 2. மினிப்பே கால்வாய் 3. எலகர கால்வாய் 4. யோத எல

07. ரன்மசு பூங்காவுக்கு எந்த வாவியிலிருந்து நீர் பெறப்பட்டது?

1. திசாவாவி 2. கலாவாவி 3. நுவர வாவி 4. மகாகனதரா வாவி

08. முதன்முதலில் இலங்கையில் பூங்கா அமைத்த மன்னனாக குறிப்பிடப்படுபவர்,

1. மூத்தசிவ மன்னன் 2. தேவநம்பியதீச மன்னன்

3. கூட்டகண்ணதிச்ச மன்னன் 4. வசப மன்னன்

09. பொய்கைகளில் மண் , கழிவுகள் ஒன்றுசேர்வதை கட்டுப்படுத்துவது தொடர்பிலான தகவல்கள் பெறப்பட்ட பொய்கைக்கு ஒரு உதாரணமாவது,

1. பொலனறுவை தாமரைக்குளம்

2. அபயகிரி யானைப் பொய்கை

3. .ரஜகல புராதன ஆராமை வளவிலிருந்த பொய்கை

4. ரன்மசு பூங்காவின் பொய்கை

10. எமது நாட்டில் முதலில் அமைக்கப்பட்ட பூங்காக்கள் இரண்டை உள்ளடக்கும் விடையானது,

1. நந்த வனம் – பத்மஸ்வர உயன 2. பத்மஸ்வர உயன-மகாமேகவனம்

3. பத்மஸ்வர பூங்கா – ரன்மசு பூங்கா 4. மகாவேகவனம் - நந்த வனம்

11. இலக்கிய மூலாதாரங்களின் அடிப்படையில் கட்டப்பட்டுள்ள விகாரை,

1. அபயகிரி விகாரை 2. ஜேதவனாராமய விகாரை

3. தூபாராம விகாரை 4. நீலகிரி விகாரை

12. மிகிந்தலை கண்டக சைத்திய தொடர்பான பின்வரும் தகவல்களில் மிகப் பொருத்தமான கூற்று,

1. செற்கற்களால் நிர்மாணிக்கப்பட்ட மிகச்சிறந்த நிர்மாணம்.

2. மிகச்சிறந்த நுழைவாயில்(வாஹல்கட) காணப்பட்டமை.

3. சிறந்த காவற்கல் காணப்பட்டமை.

4. புராதன ஆபரண தொழிற்சாலை காணப்பட்டமைக்கு சான்று கிடைத்துள்ளமை.

13. புதிய சூளையை அமைத்து புராதன உறுதியான செங்கற்களுக்கு நிகரான செங்கற்களை உற்பத்தி செய்து சமீப காலத்தில் புனரமைப்பு செய்யப்பட்ட தாதுகோபம் எது?

1. தூபாரர் 2. ருவன்வெலிசாய 3. அபயகிரி 4. ஜேதவனாராமய



kalvi.lk

14. இராசரட்டை காலத்திற்குரிய கலையம்சம் பொருந்திய வட்டதாகே பின்வருவனவற்றுள் எது?

1. மெதிரிகிரிய வட்டதாகே
2. பொலனறுவை வட்டதாகே
3. தூபாராம வட்டதாகே
4. லங்காராம வட்டதாகே

15. மழை நீரை முறையாக வெளியேற்றும் வளர்ச்சியடைந்த தொழில்நுட்பம், எமது நாட்டில் காணப்பட்டமைக்கு சான்று கிடைக்கப்பெற்ற பிரதேசம் எது?

1. குட்டம் பொய்கை அருகில்
2. அபயகிரி தாதுகோபத்தின் அருகில்
3. ருவன்வெலிசாய அருகில்
4. ஆலாகன பிரிவெனா அருகில்.

16. மகாயான கருத்துக்கள் பரவியதுடன், இந்நாட்டில் பிரபல்யமான வழிபாட்டுமுறை,

1. புனிததாது வழிபாடு
2. போதிசத்துவர் வழிபாடு
3. விகாரை வழிபாடு
4. தாதுகோப வழிபாடு

17. அநுராதபுர யுகத்தில் ஓவியக் கலையின் வளர்ச்சிக்கு சான்றாக காணப்படும் , பூரணமான ஓவியங்களைக் காணக்கூடிய இடம் பினவருவனவற்றுள் எது?

1. சித்துல்பவ்வ
2. ஹிந்தகல
3. வெஸ்ஸகிரிய
4. சீகிரியா

18. இந்நாட்டில் கலை நிர்மாணங்களில் இந்து சமயத்தின் செல்வாக்கு காணப்பட்டமைக்கான மிகச் சிறந்த உதாரணமாக அமைவது,

1. கட்டட நுழைவாயிலின் அருகில் காவற்கல் நிறுவியமை.
2. கெடிகே சம்பிரதாயத்திற்கு அமைவாக கட்டடங்கள் அமைத்தமை.
3. சிலை வழிபாடு பிரல்யமடைந்தமை.
4. பொலனறுவை சந்திரவட்டக்கல்லிலிருந்து எருதின் உருவம் அகற்றப்பட்டமை.

- **இலக்கம் 19 ,20 இல் தரப்பட்டுள்ள ‘அ’’ஆ’ பிரிவுகளை மிகப் பொருத்தமாக இணைத்தால் வரும் விடையின் கீழ் கோடிடுக.**

19.

| ‘அ’ பிரிவு | ‘ஆ’ பிரிவு |
|---|---|
| 1. தூபாராம | A. நிஸ்ஸங்கமல்ல மன்னன் |
| 2. மிரிசவெட்டிய | B. மகாபராக்கிரமபாகு மன்னன் |
| 3. ரன்கொத் விகாரை | C. தேவநம்பியதீச மன்னன் |
| 4. தெதிகம கொட்ட விகாரை | D. துட்டகைமுனு மன்னன் |

1. ACBD
2. DCAB
3. CDAB
4. CDBA



kalvi.lk

20. ‘அ’ பிரிவு ‘ஆ’ பிரிவு

| ‘அ’ பிரிவு | ‘ஆ’ பிரிவு |
|---|---|
| 1. நில்லக்ககம | A. தூபாராம சிலைமனை |
| 2. தம்பேகொட | B. போதிசத்துவ சிலை |
| 3. அநுராதபுரம் | C. போதி மனை |
| 4. பொலனறுவை | D. கலாவாவி |

1. ABDC 2. CBDA 3. CADB 4. BCDA

## பகுதி – II

- **முதலாம் வினா கட்டாயமானது.**
- **ஏனைய நான்கு வினாக்களுக்கு விடையளிக்க.**
- **மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க.**

01. பின்வரும் A,B உருக்களில் தரப்பட்டுள்ள படங்களை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடையளிக்க.

**A.**.



(அ) 1. உரு A யில் காணப்படும் உருவை இனங்கண்டு பெயரிடுக.
2. இந்நிர்மாணம் எப்பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டது?
3. இது எக்காரியத்திற்காக பயன்படுத்தப்பட்டுள்ளது?
4. இந்நிர்மாணத்தினூடாக எமது மூதாதையரின் எந்த தொழில்நுட்பத் திறன் வெளிப்படுகின்றது?

**B.**



(ஆ) 1. உரு B யில் காட்டப்பட்டுள்ள பொய்கை எப்பெயரால் அழைக்கப்படுகின்றது?
2. இப்பெயர் எக் காரணத்தினால் பயன்படுத்தப்படடுள்ளது?
3. இது காணப்படும் வரலாற்று சிறப்பு மிக்க நகரம் எது?
4. அதனை நிர்மாணிக்க பயன்படுத்தப்பட்டுள்ள ஏதேனும் ஒரு பொருளைப் பெயரிடுக.

(2x8=16புள்ளிகள்)

02. i. மகாவம்சத்தில் குறிப்பிட்டுள்ளதன்படி பண்டுகாபய மன்னனால் நிர்மாணிக்கப்பட்ட குளங்கள் இரண்டினைப் பெயரிடுக. ( 02 புள்ளிகள்)

ii. சிறு குளங்களுக்கு புறம்பாக மகாவாவிகளை நிர்மாணிப்பதற்கு ஏதுவான காரணியை சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)



kalvi.lk

iii. மகா வாவிகளை நிர்மாணித்தமையால் இலங்கையர் பெற்றுக்கொண்ட வெற்றிகள் மூன்றை சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

03. i. பின்வரும் குளங்களை நிர்மாணித் மன்னர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

A- ஹுருளு வாவி B- மாததுகாம வாவி (02 புள்ளிகள்)

ii. கால்வாய்கள் அமைப்பதற்கு ஏதுவான காரணிகள் இரண்டைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

iii. குளத்தின் பிரதான அம்சங்கள் மூன்றைக் குறிப்பிட்டு, நீர் விரும்பும் ஒரு அம்சத்தால் மேற்கொள்ளப்படும் காரியங்களை விளக்குக. (05 புள்ளிகள்)

04. i. பொய்கைகள் அமைக்க ஏதுவான காரணிகள் இரண்டைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

ii. ரன்மசு பூங்காவில் காணக்கூடிய விசேட அம்சங்கள் இரண்டை விளக்குக.(04 புள்ளிகள்)

iii. சீகிரியா நீர்ப்பூங்கா பற்றி ஐந்து வாக்கியங்கள் எழுதுக. (05 புள்ளிகள்)

05. i. உலோக கைத்தொழிலில் ஈடுபட்ட பின்வருவோரை, அக்காலத்தில் எப்பெயர் கொண்டு அழைத்ததாக கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

A – கொல்லர் B – தகர கம்மாளர் (02 புள்ளிகள்)

ii. இந்நாட்டில் வளர்ச்சியடைந்த உலோக தொழில்நுட்பம் காணப்பட்டைமையை நான்கு வாக்கியங்களினூடாக எழுதுக. (04 புள்ளிகள்)

iii. முற்காலத்தில் இந்நாட்டில் செதுக்கல், சிற்பக்கலைகளின் வளர்ச்சியை சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

06. i. இராசரட்டை காலத்திற்குரித்தான சமய சார்பற்ற கட்டடங்கள் இரண்டைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

ii. தூபிமனை எனப்படும் வட்டதாகே என்பதனால் குறிப்பிடப்படுவது யாது? (04 புள்ளிகள்)

iii. சிலைமனைகள் உருவாக்கப்பட்ட மரபுகள் மூன்றையும் குறிப்பிட்டு, அது தொடர்பில் இரு வாக்கியங்கள் எழுதுக. (05 புளளிகள்)

07. i. ருவன்வெளிசாய முற்றத்தில் கண்டெடுக்கப்பட்ட சிலைகள் எம் மன்னர்களுடைவை எனக் கூறப்படுகின்றது? (02 புள்ளிகள்)

ii. கலையம்சம் பொருந்திய சந்திரவட்டக்கல்லைப் பற்றி இரண்டு வாக்கியங்கள் எழுதுக. (04 புள்ளிகள்)

iii. இந்நாட்டில் காணப்பட்ட விஞ்ஞான சுகாதார சேவைளின் வளர்ச்சி பற்றி ஐந்து வாக்கியங்கள் எழுதுக. (05 புள்ளிகள்)



kalvi.lk

# தரம்
# 6,7,8

# தமிழ்

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Zoom செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் தமிழ் பாட வகுப்புகள்.

- ✅ மாறாத நேர அட்டவணையுடனான வகுப்புகள்.
- ✅ மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்த தொடர்ச்சியான பரீட்சைகள்.
- ✅ பயிற்சி செயலட்டைகள் pdf வடிவில் வழங்கப்படும்.

**மாதக் கட்டணம்**

**850/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

**தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.**



கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

### எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page